23.09.2025 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஒ.எஸ்.எண்.122/2017 ) திரு.சூசைபிரான்சிஸ்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -</u>

1) இந்த வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்துப்பார்த்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு வாதி எனக்கு அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் ஆமாம். அதற்குநான் பதில் அறிவிப்பு கொடுக்கவிலலை என்றால் எனது வழக்கறிஞரிடம் சொல்லி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன். நான் பதில் அறிவிப்பு கொடுத்தாக சொல்லுவது வழக்கிற்காக சொல்லுகிறேன் என்றால்சரியல்ல. அவ்வாறு பதில் கொடுத்திருந்தால் எனது எதிர்வழக்குரையில் சொல்லியிருப்பேன் என்றும், ஆவணமாக தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சவரிமுத்து நாடார் 1வது அயிட்டச்சொத்தை எனக்கு வாய்மொழியாக கொடுத்துவிட்டதாகசொல்லி தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். பிராது 1வது அயிட்டச்சொத்திற்கு எனது பெயரில் தனி பட்டாவோ, அடங்கலோ எதுவும் கிடையாது என்றால் சரிதான் சவரிமுத்து நாடார் பெயரில் தீர்வை ரசீது உள்ளது. நான் எனக்கு வாய்மொழியாக சவரிமுத்து நாடார் கொடுத்தாக சொல்லுவது வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வாய்மொழியாக எந்த தேதி,எந்த மாதம், எந்த வருடம் யார் முன்னிலையில் கிடைத்தது என்று எதிர்வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தந்தை தாக்கல் செய்த அ.வ.எண்.230/2013 வழக்கின் 1வது அயிட்ட சொத்தினையும் வேறு சொத்தினையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருந்தா என்றால் சரிதான அதில் 3 சொத்துக்கள் காண்பிக்கப்பட்டியிருந்தது. அந்த வழக்கில் இந்த வழக்கின் வாதி தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். அ.வ.எண்.230/2013 வழக்கில் சேர்க்கப்பட்ட பிரதிவாதிகள் எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான் எனது பங்காளிகள் தான்.

2) நான் மட்டும் தான் அ.வ.எண்.230/2013 வழக்கில் எதிர்கட்சி செய்து மேல்நடத்தி வந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வழக்கின் 1வது அயிட்டச்சொத்தின் வருவாய்துறை ஆவணங்கள் எனது பெயரில் உள்ளதாக கட்சி செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எந்தவித வருவாய்துறை ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாவா 1வது அயிட்டச்சொத்தை பொறுத்து தாக்கல் செய்யவில்லை. பொதுவாக ஒரு நபருக்கு பட்டா மாற்றம் செய்யும்

போது ஸ்தல விசாரணை செய்து தான் பட்டா மாற்றம் செய்வார்கள் என்றால் ஆவணங்களை சரிபார்த்து பட்டா மாற்றம் செய்வார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 பட்டா ஆவணத்தை வாதி பெயரில் ஏற்பட்டியிருப்பதை காட்டி கேட்ட போது அவருடைய பெயரில் பத்திரத்தின் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதாக சாட்சி கூறுகிறார். பட்டா மாற்றம் குறித்து வருவாய்துறையில் எந்தவித மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் செய்திருக்கிறேன். மேல்முறையீடு செய்த விவரங்களை எதிர்வழக்குரையிலும்,நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான்சொல்லுவது போல் எந்தவிதமான மேல்முறையீடு செய்யவில்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அவசியக்கட்சிகள் சேர்க்கவில்லை என்று சொல்லியுள்ளதற்கு யார் யார் அவசியக்கட்சியினர் என்று சொல்லவில்லை என்றால் அவசியக்கட்சிகள் யாரும் இல்லை.

3) இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது சொத்தை அனுபவம் செய்வதை இடைஞ்சல் செய்வதாக வாதி என் மீது கொப்பம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நீதிமன்றம் வழங்கிய உறுத்துக்கட்டளை பரிகாரத்தின் அடிப்படையில் நடந்து கொள்வேன் என்று எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் தாவாச்சொத்து சர்வே எண்.8/29 சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வாதி பெயரில் ஏற்பட்டுள்ளது. எனது பெயரில் ஏற்பட்டதாகசொல்லும் அடங்கல் கணக்கு எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் இதற்குமுன்பு தாக்கல் செய்துள்ளேன், தாக்கல் செய்கிறேன். நான்சொல்லுவது போல் எனது பெயரில் அடங்கல் கணக்கு ஏற்பட்டது கிடையாது என்றும் அதை நான் தாக்கல் செய்யவிலலை என்றால் சரியல்ல. வாதிக்கு கிரையம் கொடுத்த முன்பாத்தியஸ்தர்கள் தான் சவரிமுத்து நாடாரின் வாரிசுகள் மரியபுஷ்பம், அந்தோணிச்சாமி என்றால் சரியல்ல அவர் வாரிசே கிடையாது. நான் மரியபுஷ்பம்,அந்தோணிச்சாமி ஆகியோர்கள் சவரிமுத்து நாடாரின் சகோதரர் வழி வாரிசுகள் ஆவார்கள் என்றும் மரியபுஷ்பம் அவரது பங்கினை அவரது சகோதரர் அந்தோணிச்சாமிக்கு நன்கொடையாக கொடுத்து அதன் அடிப்படையில் அந்தோணிச்சாமி தக்க மறுபயனுக்கு வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும் அதன் அடிப்படையில் வாதி பெயருக்கு பட்டா, அடங்கல் ,தீர்வை ரசீதுகள் ஏற்பட்டு

அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்துள்ளேன். எனது தகப்பனார் தாவா 1வது அயிட்டச்சொத்து தேவசகாயத்திற்கு பாத்தியப்பட்டது என்று கட்சி செய்தார் என்றால் சரிதான். நானும், எனது தகப்பனாரும் கூட்டு சேர்ந்து சொத்துக்களை வாதியிடமிருந்து அபகரிக்க வேண்டி பொய்யான விவரங்களை கூறி கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி பெயரில் ஏற்பட்டுள்ள கிரையப்பத்திரத்தை ரத்து செய்யவோ, மேல்நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளேனா என்றால் இல்லை வருவாய்துறையில் நடவடிக்கை எடுத்துள்ளேன்.

4) வருவாய்துறையில் நான் நடவடிக்கை எடுத்தாக சொல்லுவது வழக்கிற்காக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வருவாய்துறையில் இன்று வரை யாருக்கும் தீர்வை ரசீது போடவில்லை. இன்று வரை தீர்வை போடவில்லை என்று சொல்லுவது வழக்கிற்காக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு உண்மையான வழக்கு என்றும் அது அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில பொய்யாக கட்சி செய்து இடைஞ்சல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி பெயரில் ஏற்பட்டுள்ள கிரையம் நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஏற்பட்டது என்றும் செல்லத்தக்கது என்றும் சொன்னால்ச ரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
23.09.2025.